**<u>2019 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28.02.2019 ம் தேதி வியாழக் கிழமை மாலை 4.00 மணியளவில் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற இயல்புக் கூட்ட பொருள்</u>**

**1)** திண்டுக்கல் மாநகராட்சி பாதாள சாக்கடைத் திட்டப்பிரிவில் பராமரிக்கப்படு வரும் டி.என். 57 ஏ.எப். 8771 ஜெட்ராடிங வாகனத்தின் தகுதிச்சான்று புதுப்பித்து வாகனத்தின் பழுதினை சரி செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மாமன்றத் தீர்மான எண். 1393 நாள் 28.12.2018ம் தேதி தீர்மானத்தில் அனுமதி அளிக்கப்பட்டதன் அடிப்படையில் மேற்படி வாகனத்தின் பழுதினை சரி செய்து தகுதிச்சான்று புதுப்பிக்கும் பணிக்கு 15.02.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்கண்ட நிறுவனஙகளிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | M/s. குமார் ஆட்டோ கேர்,<br>ஆட்டோமொபைல்ஸ் ஒர்க்ஸ்,<br>எஸ்.எம்.பி. ஸ்கூல் அருகில், திண்டுக்கல். | 48350/- |
| 2 | M/s. கே.எம்.எ. மோட்டார்ஸ்,<br>மீனாட்சி நாயக்கன்பட்டி,<br>மின்சார வாரியம் எதிரில், திண்டுக்கல். | 51050/- |

வரப்பெற்ற மேற்கண்ட ஒப்பந்தப் புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. குமார் ஆட்டோ கேர், நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது. (ந.க.எண். 15838/2018/இ4)

**<u>அலுவலக குறிப்பு</u>**

அனுமதிக்கலாம்

---

**2)** திண்டுக்கல் மாநகராட்சி மூலதன மான்யத் தொகை 2017-18 திட்டத்தின் கீழ் ரூ.10.17 கோடி மதிப்பீட்டில் ஆத்தூர் காமராஜர் சாகர் அணை அருகில் கூடுதல் நீர் ஆதாரம் உருவாக்கிட கூடுதல் நீர்த்தேக்கம் கட்டுதல் மற்றும் பழைய நீர்த்தேக்கத்தை ஆழப்படுத்தும் பணிக்கு 25.02.2019 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| | |
|---|---|
| 1) | திரு.டி. தமிழ்ராஜன், ஆண்டிப்பட்டி, தேனி |
| 2) | மெசர்ஸ். கே.ஏ.ஐ.ஜி. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை |

வரப் பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்ததில் ஒப்பந்தப்புள்ளி நமூனாக்களில் குறிப்பிட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்து மேற்கண்ட ஒப்பந்ததாரர்கள் தகுதி வாய்ந்தவர்களாக இருந்தமையால், மேற்படி தகுதி வாய்ந்த இரு ஒப்பந்ததராா்களின் விலை விபரப் பட்டியல் **28.2.2019** ல் திறக்கப்பட்டு மதிப்பீட்டு பட்டியலுடன் ஒப்பு நோக்கப்பட்டதில் கீழ்க்காணுமாறு இரு ஒப்பந்தப்புள்ளிகளுமே மதிப்பீட்டை விட கூடுதலாக அளிக்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| **1)** | திரு.டி. தமிழ்ராஜன், ஆண்டிப்பட்டி, தேனி | **103029494.29** | 11.99 % மதிப்பீட்டிற்கு கூடுதல் |
| **2)** | மெசர்ஸ். கே.ஏ.ஐ.ஜி. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை | **108563580.02** | 18.01 % மதிப்பீட்டிற்கு கூடுதல் |

வரப் பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே மதிப்பீட்டை விட கூடுதலாக வரப் பெற்றுள்ளது. மேற்கண்டவாறு கூடுதலில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.டி. தமிழ்ராஜன், அவர்களிடம் விலைக்குறைப்பு செய்து தரக் கோரி கடிதம் அளித்ததில் அன்னார் தனது **28.2.2019**ம் தேதிய கடிதத்தில் கீழ்க்கண்டவாறு விலைக் குறைப்பு சம்மதக் கடிதம் அளித்துள்ளார்.

| ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்ட தொகை மற்றும் விலை விகிதம் | விலைக் குறைப்பு செய்தபின் ஒப்பந்தப்புள்ளி தொகை மற்றும் விலை விகிதம் |
|---|---|---|
| திரு.டி. தமிழ்ராஜன், ஆண்டிப்பட்டி, தேனி | **103029494.29**<br>11.99 % மதிப்பீட்டிற்கு கூடுதல் | **96540411.46**<br>4.94 % மதிப்பீட்டிற்கு கூடுதல் |

மேலும் அக் கடிதத்தில் எரிபொருட்களின் விலை, வேலை ஆட்களின் கூலி, வண்டி வாடகை மற்றும் வேலைக்குத் தேவையான தளவாடச் சாமான்களின் விலை அதிகமாக உள்ளதால் இதற்கு மேலும் விலைக் குறைப்பு செய்து தர இயலாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இப் பணிக்கான மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படும் கால தாமதத்தை கருத்தில் கொண்டும், எதிர் வரும் கோடை காலத்திற்கு முன்பாக பணி துவக்கப்பட வேண்டுமென்பதாலும், பணியின் அவசர அவசியம் கருதியும், ஷை பணி திட்டப் பணி என்பதாலும், பணியினை விரைந்து முடிக்க வேண்டியிருப்பதாலும் மதிப்பீட்டை விட **4.94** சதவீதம் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.டி. தமிழ்ராஜன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**

**1)** அனுமதி வழங்கலாம்.

2) முதல் அழைப்பில் வரப் பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே மதிப்பீட்டை விட கூடுதலாக வரப் பெற்றுள்ளன. இப் பணிக்கான மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படும் கால தாமதத்தை கருத்தில் கொண்டும், எதிர் வரும் கோடை காலத்திற்கு முன்பாக பணி துவக்கப்பட வேண்டுமென்பதாலும், பணியின் அவசர அவசியம் கருதியும், ஷை பணி திட்டப் பணி என்பதாலும், பணியினை விரைந்து முடிக்க வேண்டியிருப்பதாலும் மதிப்பீட்டை விட 4.94 சதவீதம் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.டி. தமிழ்ராஜன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

3) மதிப்பீட்டுத் தொகையினை விட கூடுதலாகும் செலவினத் தொகையினை மாநகராட்சி நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்

---

**3)** திண்டுக்கல் மாநகராட்சிக்கு அரசாணை எண். (ப) 424, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (எம்சி 2) துறை, நாள் 30.6.2015 மற்றும் அரசாணை நிலை எண். 126, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (எம்சி 2) துறை, நாள் 14.8.2018 ன்படி ஆத்தூர் நீர்த்தேக்கத்தில் கூடுதல் நீர் ஆதாரம் உருவாக்கும் பொருட்டு ரூ.20.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் 90 சதவீதம் மானியமாகவும், 10 சதவீதம் பொது நிதியிலிருந்தும் செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது. இப் பணிக்கு 27.10.2015 ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மதிப்பீட்டினை விட 7.89 சதவீதம் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த திரு.டி.தமிழ்ராஜன், ஒப்பந்ததாரருக்கு 21.1.2016 அன்று வேலை உத்திரவு வழஙகப்பட்டது. இப்பணியானது WAPCOS PVT LTD கலந்தாலோசக நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டது. இத் திட்டம் ரூ.21.97 கோடி செலவினத்தில் முடிக்கப்பட்டுள்ளது.

இப் பணியில் ஆத்தூர் காமராஜர் அணையின் வடபுறம் திண்டுக்கல் மாநகராட்சிக்குச் சொந்தமான சுமார் 63 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள மேடான பகுதியினை தூர் வாரி கூடுதலாக 865.20 எம்எல் நீர் சேகரிக்கும் வகையில் அரசாணை நிலை எண். 109, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (எம்சி 2) துறை, நாள் 1.11.2018 ன்படி ரூ.31.15 கோடிக்கு திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

மேற்படி அரசாணையில் திருத்திய நிர்வாக அனுமதி மூல ஒப்பந்த சதவீத மதிப்பீட்டினை விட 25 சதவீதம் கூடுதலாக உள்ளதால் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி 2000ல் விதி 14 (எ) ன்படி மேற்கொள்ளவிருக்கும் கூடுதல் பணியினை செயல்படுத்த புதிய ஒப்பந்தப்புள்ளி கோர தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கூடுதல் பணியினை ரூ.10.17 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த தலைமைப் பொறியாளர், சென்னை

அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு **25.02.2019** ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

இப் பணியினையும், ஏற்கனவே ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் கூடுதல் அணை கட்டும் பணியினை மேற்பார்வை செய்த நிறுவனமான WAPCOS PVT LTD நிறுவனத்தினை கலந்தாலோசக நிறுவனமாக நியமித்து தர நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் வழியாக மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைக் கழகம், சென்னை அவர்களுக்கு கடித வரைவு அனுப்ப மாமன்றம் அனுமதி வழஙகலாம். (ந.க.எண். 2398 / 2014 / இ2)

**அ.குறிப்பு**

1) அனுமதி அளிக்கலாம்.
2) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் வழியாக மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைக் கழகம், சென்னை அவர்களுக்கு அப் பணியில் ஏற்கனவே மேற்பார்வை செய்த WAPCOS PVT LTD நிறுவனத்தினரையே கலந்தாலோசக நிறுவனமாக நியமிக்க கடித வரைவு அனுப்பியமைக்கும் மாமன்றம் அனுமதி வழஙகலாம்.

---

**4)** திண்டுக்கல் மாநகராட்சி பாதாள சாக்கடை திட்டம் வீடுகளுக்கு கழிவுநீர் குழாய் இணைப்பு வழஙக வைப்புத் தொகை மற்றும் இணைப்புக் கட்டணம் வசூல் செய்யும் பொருட்டு அரசாணை (நிலை) எண். 126 நகராட்சிகளின் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (மாந.2) துறை நாள் **28.11.2018** ஆணையின்படி பொது மக்களிடமிருந்து மேற்படி இணைப்பு வழஙக வைப்புத் தொகை மற்றும் இணைப்புக் கட்டணம் நான்கு (4) தவணைகளில் வசூல் செய்யப்பட்டு இணைப்பு வழஙகப்படும் என்ற விபரத்தினை பொதுமக்களுக்கு தெரிவிக்க விளம்பரம் செய்த தினந்தந்தி தினசரி நாளிதழுக்கு ரூ. 7,488/– வழஙக மாமன்றத்தின் ஒப்புதலுக்கும்.

| வரிசை எண். | நாளிதழ்களின் பெயர் | விளம்பர நாள் | ரசீது எண். நாள் | தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| **1** | தினந்தந்தி தினசரி நாளிதழ் , திண்டுக்கல் | **29.12.2018** | DGL/ 18-19- 0010870 dt: 19.12.2018 | **7,488.00** |
| மொத்தம் | | | | **7,488.00** |

மேற்கண்ட தொகையினை மேற்காணும் நாளிதழுக்கு வழஙக மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **( ந.க.எண். 2568 / 2012/ இ 4 )**

---

**5)** திண்டுக்கல் மாநகராட்சிக்கு சொந்தமான அடியனூத்து கிராம புல எண். 560, 559, 558, 556, 566 முடிய உள்ள 9.10 ஏக்கர் காலியிடத்தில் திண்டுக்கல்பால் உற்பத்தியாளர்கள்

சங்கத்திற்கு நிலமாற்றம் செய்ய கோரி வட்டாட்சியர், திண்டுக்கல் (கிழக்கு) அவர்களின் ந.க.எண். 9955/2016/அ3, நாள். 08.12.2016ம் தேதி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி இடம் திண்டுக்கல் மாநகராட்சி குடிநீர் திட்டத்தின் கீழ் 1901–ம் ஆண்டு கட்டாய நில எடுப்பு திட்டத்தின் கீழ் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு மாநகராட்சி பெயரில் அரசாணை எண். 4911–A 26, நாள். 17.02.1927ல் உத்திரவு பிறப்பிக்கப்பட்டு தற்பொழுது மாநகராட்சி கட்டுப்பாட்டில பல்வேறு பயன்பாட்டிற்காக இருந்து வருகிறது.

இந்நிலையில் அரசு ஆணை எண் 25, நாள். 18.02.2005ன் படி சமத்துவபுரம் அமைக்க 9 ஏக்கர் 65 செண்ட் நில ஒப்படைப்பு செய்யப்பட்டதற்கு பின்னேற்பு வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி துறை மாநகராட்சி நகராட்சி நிர்வாகத்திற்கு கட்டுப்பட்ட இடங்களை வேறு துறைக்கோ அல்லது தனி நபர்களுக்கு வழங்குவதற்கு அரசு ஆணை எண். 730, நாள். 17.04.1976ல் தடை விதிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி இடத்தினை நில ஆர்ஜிதம் மூலம் கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு தற்காலிக சந்தை மதிப்பிலான நில கிரைய தொகை மற்றும் இழப்பீடு தொகையினை மாநகராட்சிக்கு அரசு நிர்ணயம் செய்தும் வழங்கும் நிலையில் நகராட்சி இடங்களை பிற துறைக்கோ தனியாருக்கோ வழங்க நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை அரசாணை (நிலை) எண். 35 நாள், 17.02.1997 மற்றும் அரசாணை (நிலை) எண். 25, நாள். 25.02.2000 இவற்றின் படி சந்தை விலை அடிப்படையில் நில மாற்றம் செய்ய பரிசீலிக்கலாம் என அரசுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக கருத்துரு அனுப்ப மாமன்றத்தால் மாமன்றத் தீர்மான எண். 473, நாள். 30.12.2016–ல் நிறைவேற்றப்பட்டது.

தற்பொழுது, 10 கிராம உள்ளாட்சிகளை சேர்த்து மாநகராட்சி எல்லை விரிவாக்கம் செய்யும் நிலையில் உள்ளதாலும், உத்தேசஙகள் நிலுவையில் உள்ளதால் மாநகராட்சியின் எதிர்கால தேவைக்கு ( நுண்ணுயிர் பூஙகா அமைத்தல், மாநகராட்சி மண்டல அலுவலகஙகள் அமைத்தல், சாலையோர வியாபாரிகளுக்கு சேமிப்பு கிடஙகு அமைத்தல், வீடு இல்லாதவர்களுக்கு வீடு அமைத்தல், மற்றும் பிற பயன்பாடுகளுக்கு) மேற்படி, இடம் தேவைப்படுவதால் பொது மேலாளர், ஆவின் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், திண்டுக்கல் அவர்கள் கோரியுள்ள 09.10 ஏக்கர் காலி நிலம் தற்போது, வழஙக இயலாது என்ற விபரம் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு தெரிவிக்க மாமன்ற பார்வைக்கும் ஒப்புதலுக்கும். **( ந.க.எண். 21860/2016/எப்1)**

**<u>அலுவலக குறிப்பு–</u>**

அடியனூத்து கிராமத்தில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தினை பொது மேலாளர், ஆவின் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், திண்டுக்கல் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்ய இயலாது. மேலும், மாநகராட்சியின் எதிர்கால தேவைக்கு

தேவை உள்ளதால் 09.10 ஏக்கர் நிலம் தற்போது வழஙக இயலாது என பொது மேலாளர், ஆவின் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், அவர்களுக்கும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கும் கடிதம் அனுப்ப மாமன்றம் ஒப்புதல் செய்யலாம்.

---

**6)** திண்டுக்கல் மாநகராட்சி சாலையோர வியாபாரிகள் வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் சாலையோர வியாபாரத்தை முறைப்படுத்துதல் சட்டம் 2014–ன் படி திண்டுக்கல் மாநகராட்சியில் உறுப்பினர்கள் தேர்தல் டிசம்பர் 2016–ல் நடைபெற்று உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டது. போட்டியின்றி தேர்வு செய்யப்பட்ட 6 நபர்கள் தேர்தல் வைப்புத்தொகையாக செலுத்திய தொகை ரூ. 2000/– வீதம் மொத்தம் ரூ. 12,000/– ஐ தேர்தல் விதி முறைகளின்படி திரும்ப உறுப்பினர்களுக்கு வழஙக மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

**(ந.க.எண். 1199/2019/எப்1)**

**<u>அலுவலக குறிப்பு–</u>**

உறுப்பினர் தேர்தலில் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்ட நபர்கள் செலுத்திய தேர்தல் வைப்புத்தொகை ரூ.2000/– வீதம் ரூ.12000/– ஐ 6 நபர்களுக்கு திரும்ப வழஙக மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**7)** திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையத்தில் அமையப் பெற்ற தஙகும் விடுதியின் உரிம காலம் பிப்ரவரி 2019 உடன் முடிவடையும் தருவாயில் பேருந்து நிலையத்தினை ஆய்வு செய்த மாவட்ட ஆட்சியர் அவர்கள், தஙகும் விடுதியின் மூலம் மாநகராட்சிக்கு பெறும் வருவாய் மிகக் குறைவு எனவும் பேருந்து நிலையத்தைச் சுற்றி அதிகப் படியான தனியார் தஙகும் விடுதிகள் உள்ளதாலும், மாநகராட்சி பேருந்து நிலைய தஙகும் விடுதியினை வணிக வளாகமாக மாற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார். அதன்படி பேருந்து நிலைய தஙகும் விடுதியினை ஏல தினத்தில் வணிக வளாகமாக மாற்றி அதிலுள்ள 26 அறைகளை தனித்தனி கடைகளாக ஏல தினத்தில் கொண்டு வந்து, பொது எலம் விடவும் கடை ஒன்றிற்கு உரிய ஏல விதிகளின்படி முன் வைப்புத் தொகை ரூ. 5.00 லட்சம் என நிர்ணயம் செய்து ஏலம் விட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண்.10193/2014/அ9).**

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**8)** திண்டுக்கல் மாநகராட்சி பொறியர் பிரிவுக்குரிய, வருவாய் பிரிவு மற்றும் தேர்தல் பிரிவு பயன்பாட்டு வாகனம் டி.என்.57.எச். 3034க்கு தகுதிச் சான்று புதுப்பிக்க மேற்கொள்ளப்பட

வேண்டிய வருடாந்திர பராமரிப்பு **(2018–19)** பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூபாயில் |
|---|---|---|
| 1 | குமார்ஆட்டோ கேர் | **74450/–** |
| 2 | K. M. A. MOTORS | **78550/–** |

மேற்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள குமார் ஆட்டோ கேர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது **( ந.க.எண். 15705 / 18 / இ3 )**

**<u>அலுவலக குறிப்பு</u>**

**1)** பொறியர் பிரிவுக்குச் சொந்தமான வருவாய் பிரிவு உபயோகத்தில் உள்ள வாகனம் எண். டி.என்.57.எச். **3034** க்கு **08.02.2019**ம் தேதியுடன் அனுமதிக்காலம் முடிவடைவதால் **10.02.2019** முதல் **10.02.2024** வரை மேலும் **5** வருட காலத்திற்கு வாகனத்தை இயக்கவும், வருடாந்திர பராமரிப்புப் பணிக்காகவும் உத்தேச செலவினத் தொகை ரூ.**75000/–** க்கு இம் மாமன்றத் தீர்மான எண். **1437**, நாள் **30.1.2019** ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**2)** எனவே வரப் பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ரூ.**74450/–** க்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள குமார் ஆட்டோ கேர் , ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்

**2)** பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள குமார் ஆட்டோ கேர் நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் முன் அனுமதி வழங்கலாம்.

---

**9)** திண்டுக்கல் மாநகராட்சி சொத்து வரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி, பாதாள சாக்கடை இணைப்பு, வரியில்லா இனம், பிறப்பு மற்றும் இறப்பு போன்ற அன்றாடப் பணிகள் அனைத்தும் கணினி வழியாக நடைபெற்று வருவதால் அனைத்து பணியாளர்களுக்கும் கணினி தேவைப்படுகிறது. எனவே DGS & D முறையில் **20** கணினிகள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.**10.00** இலட்சத்தினை பொது நிதியில் மேற்கொள்ள ஏற்கனவே மாமன்றத் தீர்மானம் எண். **1266**, நாள் **7.9.2018** ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே Ascent – e – Digital Solutions (P) Ltd,Erode என்ற நிறுவனத்திடம் **20** கணினிகளை DGS & D முறைப்படி வாங்க மாமன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. **( ந.க.எண். 3009/ 2018/ இ 3)**

**அலுவலக குறிப்பு–**

**1)** மாமன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி A scent – e – Digital Solutions (P) Ltd,Erode என்ற நிறுவனத்திடமிருந்து 20 கணினிகள் வாங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**10)** திருமதி. ஜெனிபா ஆரோக்கிய ராணி, க/பெ லூர்து ஆரோக்கிய ராஜ், நல்லமநாயக்கன்பட்டி, தோட்டனூத்து, திண்டுக்கல் என்பவர்களுக்கு கடந்த **11.05.2005**ம் தேதியன்று திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தை அருள் மதிவாணன் பிறப்புச் சான்றில் தந்தையின் பெயர் சேகர் என்பதை லூர்து ஆரோக்கியராஜ் என்றும், தாயார் பெயர் ஜெனிபர் என்பதை ஜெனிபா ஆரோக்கியராணி என்றும் திருத்தம் செய்து பிறப்புச் சான்று வழஙகுமாறு இம்மாநகராட்சி ஆணையர் அவர்களை பிரதிவாதியாக சேர்த்து திண்டுக்கல் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண். ஓ.எஸ்.**264/2017**ல் இம்மாநகராட்சியின் சார்பாக ஆஜராகி, வழக்காடியமைக்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ. **5000/–**ஐ வழஙகிட திரு. எஸ். ஜெகநாதன், இம்மாநகராட்சி வழக்கறிஞர் கோரியுள்ளார். எனவே மேற்படி கட்டணம் ரூ.**5000/–** வழஙகிட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.518/2019/எச்3).

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை பொது நிதியிலிருந்து வழஙகிடவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**11)** திருமதி. ஜெனிபா ஆரோக்கிய ராணி, க/பெ லூர்து ஆரோக்கிய ராஜ், நல்லமநாயக்கன்பட்டி, தோட்டனூத்து, திண்டுக்கல் என்பவர்களுக்கு கடந்த **02.09.2003**ம் தேதியன்று திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தையின் பிறப்புச் சான்றில் தந்தையின் பெயர் சேகர் என்பதை லூர்து ஆரோக்கியராஜ் என்றும், தாயார் பெயர் ஜெனிபர் என்பதை ஜெனிபா ஆரோக்கியராணி என்றும், குழந்தையின் பெயர் மரிய யாழினி என்பதை மேரி யாழினி என்றும் திருத்தம் செய்து பிறப்புச் சான்று வழஙகுமாறு, இம்மாநகராட்சி ஆணையர் அவர்களை பிரதிவாதியாக சேர்த்து திண்டுக்கல் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண். ஓ.எஸ்.**266/2017**ல் இம்மாநகராட்சியின் சார்பாக ஆஜராகி, வழக்காடியமைக்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ. **5000/–**ஐ வழஙகிட திரு. எஸ். ஜெகநாதன், இம்மாநகராட்சி வழக்கறிஞர் கோரியுள்ளார். எனவே மேற்படி கட்டணம் ரூ.**5000/–** வழஙகிட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.519/2019/எச்3).

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை பொது நிதியிலிருந்து வழஙகிடவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**12)** திண்டுக்கல் மாநகராட்சி பொறியியல் பிரிவிற்குச் சொந்தமான நகரமைப்பு பிரிவு பயன்பாட்டு வாகனம் டி.என்.57.எம்.7778 க்கு டயர்கள் மிகவும் பழுதடைந்த காரணத்தால் மேற்கண்ட வாகனத்திற்கு புதிய டயர்கள் வாங்க உத்தேச செலவினத் தொகை ரூ.30600/– (7650 x 4 ) ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**( ந.க.எண்.16229 / 2018/ இ3 )**

அலுவலக குறிப்பு–

1) அனுமதி வழங்கலாம்.
2) அனுமதியை எதிர்நோக்கி எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**13)** இம் மாநகராட்சியில் பொது நிதி 2018–19 ன் கீழ் வார்டு எண்.14, கோபால் நகரில் வடிகால் அமைக்கும் பணிக்கு 28.2.2019 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றது.

| வ.எண். | ஒப்பந்தக்காரரின் பெயர் | விலைவிகிதம் | முன் வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1) | திரு.ஜான் போஸ்கோ | 0.01 % மதிப்பீட்டிற்கு குறைவு | ரூ.5000/– மதிப்புள்ள செ.சீ.எண். 18503 |
| 2) | திரு.எ.நாட்ராயன் | 7.00 % மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.5000/– மதிப்புள்ள சேமிப்புப் பத்திரம் |

(ந.க.எண். 271 / 2013 / இ4)

<u>அ.குறிப்பு</u>

1) ரூ.5,00,000/– மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட இப் பணிக்கு மாமன்றத் தீர்மானம் எண். 1190, நாள் 27.7.18 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2) முதல் அழைப்பில் வரப் பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஜான் போஸ்கோ, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

---

**14)** இம் மாநகராட்சியில் பொது நிதி 2018–19 ன் கீழ் வார்டு எண்.45, மேட்டுப்பட்டியில் பழைய ரேசன் கடை தெரு மற்றும் மேட்டுப்பட்டி விஸ்தரிப்பு 4வது தெருவில் வடிகால் கட்டும் பணிக்கு

28.2.2019 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றது.

| வ.எண். | ஒப்பந்தக்காரரின் பெயர் | விலைவிகிதம் | முன் வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1) | திரு.ஜான் போஸ்கோ | 0.01 % மதிப்பீட்டிற்கு குறைவு | ரூ.5000/– மதிப்புள்ள செ.சீ.எண். 18504 |
| 2) | திரு.எ.நாட்ராயன் | 7.00 % மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.5000/– மதிப்புள்ள சேமிப்புப் பத்திரம் |

(ந.க.எண். 271 / 2013 / இ4)

<u>அ.குறிப்பு</u>

1) ரூ.5,00,000/– மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட இப் பணிக்கு மாமன்றத் தீர்மானம் எண்.1457, நாள் 30.1.2019 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2) முதல் அழைப்பில் வரப் பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஜான் போஸ்கோ, ஒப்பந்ததாரரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

---

**15)** இம் மாநகராட்சியில் குடிநீர் நிதி 2018–19 ன் கீழ் வார்டு எண்.25 முதல் 48 வரை அடி பம்பு மற்றும் சிறுமின் விசை இறைப்பான் பராமரிப்பு செய்யும் பணிக்கு 28.2.2019 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றது.

| வ.எண். | ஒப்பந்தக்காரரின் பெயர் | விலைவிகிதம் | முன் வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1) | ஜெகதீஸ்வரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 0.02 % மதிப்பீட்டிற்கு குறைவு | ரூ.20000/– மதிப்புள்ள வஙகி வரைவோலை |
| 2) | திரு.எ.நாட்ராயன் | 8.77 % மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.20000/– மதிப்புள்ள வஙகி வரைவோலை |

(ந.க.எண். 271 / 2013 / இ4)

<u>அ.குறிப்பு</u>

1) ரூ.20,00,000/– மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட இப் பணிக்கு மாமன்றத் தீர்மானம் எண். 1439 , நாள் 30.1.2019 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2) முதல் அழைப்பில் வரப் பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஜெகதீஸ்வரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், ஒப்பந்ததாரரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

---

**16)** திண்டுக்கல் மாநகராட்சிக்குச் சொந்தமான மேற்கு ரத வீதி, மாநகராட்சி துவக்கப் பள்ளியில் 2 வகுப்பறை கட்டிடம் கட்ட SSA திட்டம் மூலம் அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும், அக் கட்டிடம் கட்ட அனுமதி வழஙகுமாறும் அப் பள்ளியின் தலைமையாசிரியரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மாநகராட்சி நிபந்தனைகளுக்குட்பட்டு SSA திட்டம் மூலம் மேற்கு ரத வீதி, மாநகராட்சி துவக்கப் பள்ளியில் 2 வகுப்பறை கட்டிடஙகள் கட்டிக் கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். 271 / 2013 / இ4 )

**அ.குறிப்பு**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்
2) மாநகராட்சியால் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு 2 வகுப்பறை கட்டிடஙகள் கட்ட மாமன்றம் அனுமதிக்கலாம்

---

**17)** இம் மாநகராட்சியில் பொது நிதி 2018–19 ன் கீழ் – அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் இருந்து கோபல சமுத்திர கரை வரை மற்றும் அரசு தலைமை மருத்துவமனையிலிருந்து அரசு மருத்துவமனை ரோடு வரை பாதாள சாக்கடை இணைப்பு மேற்கொள்ளும் பணிக்கு 27.02.2019 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| | |
|---|---|
| 1) | பிஎம்பி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் |
| 2) | ஈடிஆர் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் |

முதல் அழைப்பில் வரப் பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் கீழ்க்காணும் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியானது தொழில்நுட்ப ரீதியாக தகுதி வாய்ந்தது என இம் மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி ஒப்பு நோக்கும் குழுவினரால் முடிவு செய்யப்பட்டது. அதன்படி, 28.2.2019 மாலை 3.00 மணியளவில் ஒப்பந்ததாரர்களின் விலை ஒப்பந்தப்புள்ளி (Price Bid) திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் (Comparative Statement) தயார் செய்யப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1) | பிஎம்பி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 4385200.30 | **4.96** % மதிப்பீட்டிற்கு கூடுதல் |

வரப் பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப ரீதியாக தகுதி வாய்ந்ததாக உள்ளதாலும், கூர்ந்தாய்வுக் குழுவின் ஒப்புதலின்படியும், பணியின் அவசர அவசியம் கருதியும், ஷை பணி திட்டப் பணி என்பதாலும், பணியினை விரைந்து முடிக்க வேண்டியிருப்பதாலும், மதிப்பீட்டை விட **4.96** சதவீதம் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள பிஎம்பி

கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண். 15105 / 2018 / இ4**

**அலுவலக குறிப்பு**

**1)** ஷை பணிக்கு ரூ.**50.00** இலட்சம் மதிப்பில் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மாமன்றத் தீர்மான எண். **1448**, நாள் **30.1.2019** இல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.
**2)** ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவின் ஒப்புதலின்படியும், பணியின் அவசர அவசியம் கருதியும், ஷை பணி திட்டப் பணி என்பதாலும், பணியினை விரைந்து முடிக்க வேண்டியிருப்பதாலும் மதிப்பீட்டை விட **4.96** சதவீதம் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள பிஎம்பி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
**3)** அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட கூடுதலாகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து ஏற்கலாம்.

---

**18)** திண்டுக்கல் மாநகராட்சி வறுமை கோட்டிற்கு கீழ்வாழும் நகர்புற ஏழைகளுக்கு குறிப்பாக விவசாய தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள எழைத் தொழிலாளர் குடும்பங்களுக்கு ஒருமுறை சிறப்பு நிதியுதவி ரூ. 2000/– வழங்கும் திட்டத்தின் கீழ் 48 வார்டுகளிலும் பலபெயர்கள் விடுபெற்றுள்ளதால் மீண்டும் அனைத்து வார்டுகளிலும் விடுப்பட்ட மக்களை சேர்க்க புதிய கணக்கெடுப்பு எடுக்க அரசு அறிவுரையின்படி ஆவண செய்யப்பட உள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 12.02.2019–ம் தேதிய சுற்றறிக்கையில் கண்டுள்ள அறிவுரையின்படி திண்டுக்கல் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 48 வார்டுகளில் வறுமைக்கோட்டிற்கு கீழ்வாழும் மக்கள் குறித்த பட்டியல்கள் மேம்படுத்துதல் தொடர்பாக கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ளவும் பயனாளிகளின் பட்டியல் வழஙகவும், புள்ளி விபரக் கணக்கெடுப்பாளர்களை பயன்படுத்தி கணணியில் பதிவேற்றம் செய்யவும், மற்றும் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள பயனாளிகள் பட்டியல் தயார் செய்து வழஙக 25000/– கணக்கெடுப்பு படிவஙகள்/ஒப்புகைரசீது 25000 எண்ணம் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி அச்சடிக்க மேலாண்மை இயக்குநர், திண்டுக்கல் மாவட்ட எழுதுப்பொருள்கள் தயாரிக்கும் மற்றும் தையல் மகளிர் மேம்பாட்டு தொழிற்கூட்டுறவு சஙகம் திண்டுக்கல் அச்சகத்திற்கும், உத்திரவு வழஙகப்பட்டது. மேலும், கணக்கெடுப்பு செய்யப்பட்டு தினந்தோறும் வரப்பெற்ற படிவத்தினை புள்ளி விபரஙகளுடன் கணணியில் பதிவேற்றம் செய்யவும் , மேற்கண்ட செலவினஙகளுக்கு உத்தேச செலவினமாக ரூ. 7,00,000/– செலவிட அனுமதி வேண்டப்படுகிறது. அதன்விவரம் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகின்றது. **(ந.க.எண். 290/2015/எப்3)**

**அலுவலக குறிப்பு–**

மேற்கண்ட செலவினஙகளுக்கு உத்தேச கட்டணமாக ரூ. 7,00,000/– பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதிக்கலாம்.

**19)** திண்டுக்கல் மாநகராட்சி எல்லைக்குப்பட்ட சர்வே வார்டு எண் 6 , பிளாக் எண்.24 , நகரளவு எண். 1124/1 பகுதி, திண்டுக்கல் அண்ணா பூ மார்க்கெட், வணிக வளாக கட்டிடத்திற்கு மேற்கே மற்றும் காவல் கட்டுப்பட்டு அறைக்கு வடக்கே, திருச்சி ரோட்டிற்கு கிழக்கே காலியாக உள்ள இடத்தில் ஆவின் பாலகம் 10' X 8' ல் அமைக்க டிடி 160 திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் மேலாளர் அவர்கள் கடந்த 29.11.2018ம் தேதிய கடிதத்தில் அனுமதி கோரியுள்ளார். மேற்படி கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது. (ROC.No.. 16050/2018/எப்3)

<u>அலுவலக குறிப்பு–</u>

கீழ்க்கண்ட நிபந்தனைக்ளுக்குட்பட்டு ஆவின் பாலகம் அமைக்க அனுமதிக்கலாம்.

1. மேற்படி, காலியிடத்தில் மாநகராட்சி வருவாயை பெருக்கும் வகையில் கூடுதல் வணிக வளாக கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி தெரிவிக்கும் நேரில் எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்காமல் உடனடியாக இடத்தினை காலி செய்து கொடுக்கப்பட வேண்டும்.
2. அரசாணை எண் 460, வருவாய் துறை நாள். 04.06.1998ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு தரைவாடகையினை நிலத்தின் வழிகாட்டி மதிப்பீட்டின் அடிப்படையில் கீழ்கண்டவாறு மாத வாடகை ரூ.1260/– என்ற விகிதத்தில் வாடகை நிர்ணயம் செய்யலாம்.
3. கீழ்க்கண்ட நிபந்தனைக்களுக்குட்பட்டு ஒப்படைக்கும் நாள் முதல் ஓராண்டு காலத்திற்கு நில வாடகைக்கு அனுமதி வழஙகி ஒப்புதல் அளிக்கலாம்.
4. சர்வே வார்டு எண் 6 , பிளாக் எண்.24, நகரளவு எண். 1124/1 பகுதி, திண்டுக்கல் அண்ணா பூ மார்க்கெட், வணிக வளாக கட்டிடத்திற்கு மேற்கே மற்றும் காவல் கட்டுப்பட்டு அறைக்கு வடக்கே, திருச்சி ரோட்டிற்கு கிழக்கே காலியாக உள்ள இடத்தில் 10' X 8' அளவில் மட்டுமே ஆவின் பாலகம் அமைக்கப்படவேண்டும்.
5. ஆவின் பாலகம் அமைக்கப்படும் பொழுது அண்ணா வணிகவளாகத்திற்கு வருகை தரும் பொதுமக்களின் வாகன நிறுத்தும் இடத்திற்கு எவ்வித இடையூறும் ஏற்படாதவாறு 10' X 8' என்ற அளவில் மட்டுமே அமைக்கப்பட வேண்டும்.
6. மேற்படி ஆவின் பாலகத்தில் பால் மூலம் தயார் செய்யப்படும் ஆவின் பாலக பொருட்கள் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும். மேலும் உள் வாடகைக்கு விடக்கூடாது. இதர பொருட்கள் விற்பனை செய்தால் அனுமதி ரத்து செய்யப்படும்.
7. எந்த ஒரு காரணத்திற்காகவும் நீதி மன்றத்தில் வழக்கு தொடரக் கூடாது.

8. மேற்படி இடத்தில் ஆவின் பாலகம் அமைக்க ஒரு ஆண்டிற்கு மட்டுமே அனுமதிக்கப்படுகிறது. ஆவின் பாலகம் தொடர்ந்து நடத்த விரும்பினால் உரிமம் முடிவுறும் மூன்று மாதத்திற்கு முன்பே விண்ணப்பம் அளித்து மீண்டும் உரிமம் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.
9. ஆவின் பாலக கடைக்கு நில வாடகையாக மாதம் ஒன்றுக்கு ரூ. 1260/– (ரூபாய் ஆயிரத்து இருநூற்றி அறுபது மட்டும்) செலுத்தப்பட வேண்டும் ஒரு வடத்திற்கான வாடகை ரூ. 12 X 1260 = ரூ. 15,120/– மற்றும் காப்புத் தொகை ரூ. 10,000/– (Security deposite) முன் வைப்புத் தொகையாக செலுத்த வேண்டும்.
10. ஆவின் பாலகத்தில் ஒருமுறை பயன்படுத்தும் நெகிழிகளை பயன்படுத்த கூடாது.

---

**20)** திண்டுக்கல் மாநகராட்சியில் கடந்த ஆண்டுகளில் ஒய்வுபெற்ற / காலஞ்சென்ற பணியாளர்களின் வாரிசுதாரர்கள் மற்றும் பணியில் உள்ள பணியாளர்களுக்கு சேமநலநிதி வட்டித் தொகை 1985 –1986 முதல் 1999 – 2000 ஆண்டு வரை மொத்த 1621 பணியாளர்கள் கணக்கீடு செய்யப்பட்ட வட்டி தொகை மொத்தம் ரூ.1,16,46,183/– ஆகும்.

இதில் இம்மாநகராட்சியில் பணியாளர்களின் மாதம் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதி தொகை, நிதிநிலை பற்றாகுறை காரணத்தினால் மாவட்ட கருவூல T.Deosit கணக்கில் மாதம் மாதம் வரவு வைக்கப்பெறாமல், அவ்வப்போது வரப்பெற்ற தொகையினை கொண்டு கருவூல கணக்கில் வரவாக்கப்பட்டதின் அடிப்படையில் , சென்னை உள்ளாட்சி தணிக்கைத் துறை இயக்குநர் அவர்களால் கருவூல கணக்கில் Deposit செய்யப்பட்ட தொகைக்கு மட்டும் 1985 –86 முதல் 1999 –2000 வரையுள்ள காலஙகளுக்கு சேமநலநிதி வட்டி தொகை ரூ.21,06,808/– இம்மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும் இம்மாநகராட்சியில் 1985 –86 முதல் 1999 –2000 வரை உள்ள காலஙகளுக்கு ஒய்வுபெற்ற / காலஞ்சென்ற பணியாளர்களின் வாரிசுதாரர்கள் மற்றும் பணியில் உள்ள மொத்த 1621 பணியாளர்களுக்கு முறையாக கணக்கிடு செய்யப்பட்ட சேமநலநிதி வட்டி தொகை மொத்தம் ரூ.1,16,46,183/– ஆகும். இதில் அவ்வப்போது பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை மாவட்ட கருவூல கணக்கில் வரவு வைக்கப்பெறாமல் ஏற்பட்ட வட்டி இழப்பின் காரணமாக, சென்னை உள்ளாட்சி தணிக்கை துறை இயக்குநர் அவர்களால்

அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.21,06,808/— போக மீதம் உள்ள வட்டி ரூ.95,39,375/— க்கான தொகை பணியாளர்களின் நலன் கருதியும் நிர்வாக நலன் கருதியும் இம்மாநகராட்சி பொது நிதியில் இருந்து வழஙகிட மாமன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மாநகராட்சியின் நிதிநிலை சரியில்லாத காரணத்தினால் உரிய காலத்தில் T.Deposit கணக்கில் பணியாளர்களின் சந்தா தொகை வரவு வைக்கப்படாமல், இருப்பினும் ஓய்வுபெற்ற பணியாளர்கள், காலஞ்சென்ற பணியாளர்களின் வாரிசுதாரர்கள் மற்றும் பணியில் உள்ள பணியாளர்களுக்கு சந்தா தொகைக்கான அரசு நிர்னைக்கப்பட்ட வட்டி தொகையுடன் வழஙகிட கோரி மனுக்கள் அளித்தும், நீதிமன்றஙகளில் வழக்குகளின் எண்.. W.P.No..15553,15554,15555,15556,15557,15558,15559,15560 and 15561 of 2013 தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றனர். எனவே நீதிமன்ற உத்திரவின்இணஙகவும், பணியாளர்களின் நலன் கருதியும், நிர்வாக காரணஙகளினால் நிதி பற்றாக்குறை ஏற்பட்ட காரணத்தினால் அரசிடமிருந்து பெறாமல் விடுபட்ட 1985 –86 முதல் 1999 –2000 வரையிலான காலஙகளுக்குரிய வட்டி ரூ.95,39,375/—க்கான தொகை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழஙகிடலாம்.

**21)** இம் மாநகராட்சியில் நான்கு நகர ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் 15 நகர சுகாதார செவிலியர்கள் மற்றும் 4 பகுதி சுகாதார செவிலியர்கள் மொத்தம் 19 நபர்களுக்கு 2018–2019 ஆம் ஆண்டிற்கு சீருடைப்படி வழங்க விண்ணப்பம் செய்துள்ளனர். தமிழ்நாடு திருத்திய ஊதிய விகித விதிகள் 2017ன்படி ஊதியம் நிர்ணயம் 01.10.2017 முதல் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து அரசாணை எண்.306 நிதி (ஊ.பிரிவு) துறை நாள் 13.10.2017ன்படி சீருடைப் படியாக நகர சுகாதார செவிலியர்களுக்கு தலா ரூ.2000/–ம் பகுதி சுகாதார செவிலியர்களுக்கு தலா ரூ.1800/–ம் புதிய ஊதிய முறையில் 01.10.2017 முதல் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே 2018–2019ம் ஆண்டிற்கு நகர சுகாதார செவிலியர்களுக்கு தலா ரூ.2000/–ம் மற்றும் பகுதி சுகாதார செவிலியர்களுக்கு தலா ரூ.1800/–ம் ஆக மொத்தம் ரூ.37200/– ஆகும். இச்செலவினம் அரசு மான்யம் 2 பங்கும் மாநகராட்சி 1 பங்குமாக வழங்கப்படும். மேற்படி செலவினத்தினை வழங்குவதற்கும் மாமன்ற அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண். 15518 / 2018 / எச் 1)

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) சீருடைப்படி வழங்கலாம்.
2) செலவினத்திற்கு அனுமதிக்கலாம்.

---

**22)** இம் மாநகராட்சியில் மகப்பேறு மருத்துவமனைகளில் பணியாற்றும் 10 மகப்பேறு உதவியாளர்களும் மற்றும் 1 பகுதி சுகாதார செவிலியரும் 2018–2019ம் ஆண்டிற்கு சீருடைப்படி வழங்க விண்ணப்பம் செய்துள்ளனர். தமிழ்நாடு திருத்திய ஊதிய விகித விதிகள் 2017ன்படி ஊதியம் நிர்ணயம் 01.10.2017 முதல் திருத்தியம*மக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து அரசாணை எண்.306 நிதி (ஊ.பிரிவு) துறை நாள் 13.10.2017ன்படி மகப்பேறு உதவியாளர்களுக்கு தலா ரூ.2000/– ம் பகுதி சுகாதார செவிலியருக்கு தலா ரூ.1800/–ம் புதிய ஊதிய முறையில் 01.10.2017 முதல் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே 2018–2019 ம் ஆண்டிற்கு மகப்பேறு உதவியாளர்களுக்கு தலா ரூ.2000/–ம் மற்றும் பகுதி சுகாதார செவிலியருக்கு தலா ரூ.1800/–ம் ஆக மொத்தம் ரூ.21,800/– ஆகும். மேற்படி செலவினத்தினை வழங்குவதற்கு மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். 15519 / 2018 / எச் 1)

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) சீருடைப்படி வழங்கலாம்.
2) இச் செலவினம் மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு அனுமதிக்கலாம்.

---

**23)** இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள வாகனம் TN57 AF 4927 வாகனத்திற்கு தகுதிச் சான்று பெற **18.02.2019** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நிறுவனம் | விலை விகிதம் |
|---|---|---|
| 1 | ஸ்ரீவிநாயகா ஆட்டோ மொபைல்ஸ், திருச்சி ரோடு, திண்டுக்கல் | ரூ.20,300/– |
| 2 | குமார் ஆட்டோ கேர், ஜிடிஎன். சாலை, திண்டுக்கல். | ரூ. 17,900/– |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் வரிசை எண். 2ல் காணும் மிகக் குறைந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள குமார் ஆட்டோ கேர், திண்டுக்கல் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கிட அனுமதி வேண்டி மாமன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.3782/2018/எச்2)**

<u>**அலுவலகக் குறிப்பு**</u>

1) அனுமதிக்கலாம்
2) பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மிகக் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள குமார் ஆட்டோ கேர், திண்டுக்கல் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**24)** இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் செயல்பட்டு வரும் **19** வாகனங்களில் தற்போது **6** நிரந்தர ஓட்டுநர்கள் மற்றும் பணி மாற்று அடிப்படையில் **3** ஓட்டுநர்கள் மொத்தம் **9** ஓட்டுநர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மீதமுள்ள வாகனங்களை இயக்குவதற்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஊதிய நிர்ணய அளவுகோலின்படி ஒப்பந்தப்புள்ளி பெற்று ஒப்பந்த அடிப்படையில் தற்காலிக ஓட்டுநர்கள் நியமனம் செய்து மேற்கொள்ளப்பட்ட பணி கடந்த **31.12.2018** உடன் முடிவடைந்ததை தொடர்ந்து, வரும் **31.03.2019** வரை கால நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, **2018–19**ன் தர விலை அடிப்படையில் வரும் **01.04.2019** முதல் மேலும் **6** மாத காலத்திற்கு இம்மாநகராட்சியின் பொது சுகாதார பிரிவு வாகனங்களை இயக்குவதற்கு **6** மாத காலத்திற்கான உத்தேச செலவினம் **ரூ.10.00** (ரூபாய் பத்து இலட்சம்) இலட்சத்திற்கு மான்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 1320 /2019/எச்1)

<u>**அலுவலகக் குறிப்பு**</u>

1. பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழஙகலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தொடர் நடவடிக்கைகள் மேற் கொண்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**25)** திண்டுக்கல் மாநகராட்சி கமலா நேரு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் அறுவை சிகிச்சை அரங்கு கட்டப்பட்டுள்ளது. அறுவை சிகிச்சை கூடத்திற்கு கூடுதலாக தேவைப்படும் அத்தியாவசிய மருத்துவ உபகரணங்கள் வாங்கிட நிதி ஒதுக்கீடு செய்யப்படாததால் அறுவை கூடம் செயல்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட உபகரணங்கள் உள்ளூரில் உள்ள வணிக நிறுவனங்களிடமிருந்து சமூக பங்களிப்பு நிதி மூலம் வாங்கி பயன்படுத்திடலாம் என முடிவு செய்து திண்டுக்கல் சண்முகவேல் குழும ஆலை தலைவர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி திண்டுக்கல் சண்முகவேல் குழும இயக்குநர் அவர்களின் **08.02.2019**ம் தேதிய கடிதத்தில், கமலா நேரு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் அறுவை சிகிச்சை கூடத்திற்கு தேவையான அத்தியாவசிய மருத்துவ உபகரணங்களை சமூக பங்களிப்பு நிதி (CSR Fund) யின் வாங்கி வழங்கிட ஒப்புதல் அளித்துள்ளார். எனவே திண்டுக்கல் சண்முகவேல் குழும ஆலை நிறுவனத்தின் மூலம் அறுவை கூடத்திற்கு தேவையான அத்தியாவசியமான மருத்துவ உபகரணங்களை வாங்கி பயன்படுத்திட ஒப்புதல் வேண்டி மாமன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**26)** இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் வாகனம் TN.57 AF 9465 வாகனத்திற்கு தகுதிச் சான்று **17.05.2019** உடன் முடிவடைவதால், மேலும் ஓராண்டிற்கு தகுதிச் சான்று பெறுவதற்கும், வாகனத்தின் பழுதுகளை சரி செய்வதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.**44,000/–**க்கு (ரூபாய் நாற்பத்தி நான்காயிரம் மட்டும்) அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.1561/2019/எச்1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**27)** இம்மாநகராட்சி மரியநாதபுரம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்டு நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. தற்போது பிரசவ அறை புதுப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் பிரசவம் பார்க்க தேவையான அத்தியவசியமான சில மருத்துவ உபகரணங்கள் இல்லாத காரணத்தினால் பிரசவங்கள் பார்க்க இயலாத நிலை உள்ளது. எனவே பொது மக்கள் மற்றும் கர்ப்பினி பெண்களின் நலன் கருதி பிரசவ அறைக்கு தேவையான அத்தியாவசியமான மருத்துவ உபகரணங்கள் வாங்கிப் பயன்படுத்திடவும், அதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று பணிகள்

மேற்கொள்ளவும் அதற்கான செலவு தொகை ரூ. 9.00 (ரூபாய் ஒன்பது இலட்சம்)ற்கு அனுமதி வேண்டி மாமன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது (ந.க.எண். 1595 / 2019 /எச்1).

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சி பொது நிதியின்கீழ் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**28)** திண்டுக்கல் மாநகராட்சி, பொது சுகாதாரப் பிரிவிற்குட்பட்ட பழனி சாலையில் இயங்கி வரும் சித்த மருந்தகத்திற்கு தினந்தோறும் வருகை தரும் நோயாளிகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நிலவேம்பு கசாயம் காய்ச்சி வழஙகப்பட்டு வருகிறது. தற்போது நிலவேம்பு கசாயம் தயாரித்து கொடுத்து வருவதால் எரிவாயு (கேஸ்) தீர்ந்து விடுவதால் நிரப்பப்பட்ட கமர்ஸியல் கேஸ் சிலிண்டர்களை பாரத் கேஸ் நிறுவனத்திடமிருந்து 01.02.2019 முதல் 31.03.2020 முடிய 12 மாதஙகளுக்கு வாஙகிக்கொள்ள கேஸ் சிலிண்டர்களுக்கு ஆகும் செலவினம் ரூ.30,000/–க்கு மாமன்றத்தில் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>(ந.க.எண். 10951 /2014/எச்1)</u>**

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**29)** இம்மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து நகர ஆரம்ப சுகாதார நிலையஙகளிலும் Bio Medical Wastage செயல்படுத்தப்பட்டு, தினந்தோறும் சேகரிக்கப்படும் மருத்துவக் கழிவுகளான Bio Medical Wastage like placenta, Blood, Cotton, Needles, IVset etc., போன்றவைகள் ராம்கி ஏஜென்சி, மதுரை நிறுவனத்திற்கு ஒப்பந்த முறையில் நாளது தேதி வரையில் வழஙகப்பட்டு வருகிறது. மேற்படி பணிக்கு 01.04.2019 முதல் 31.03.2020 வரை தேவையான செலவினத் தொகை (தோராயமாக) தொகை ரூ. 75,000/–ற்கு (ரூபாய் எழுபத்தைந்தாயிரம்) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 7237 /2018/எச்1 ).**

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**30)** இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள வாகனஙகளை இயக்குவதற்கு ஒப்பந்த அடிப்படையில் தற்காலிக ஓட்டுநர்கள் நியமனம் செய்து, பணி மேற்கொள்ள 27.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | நிறுவனம் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள தொகை (PF, ESI, Ins.,Adv., உட்பட) ரூ. |
|---|---|---|
| 1 | திரு.ஏ.ராமலிங்கம்,<br>PWD காண்ட்ராக்டர்,<br>அய்யம்பாளையம், திண்டுக்கல் மாவட்டம். | கூலி ரூ. 453.00<br>PF, ESI, Ins.,safty ரூ.77.00<br>நிர்வாக கட்டணம் ரூ.22.65<br>மொத்தம் ரூ. 552.65/–<br>(1 நபருக்கு, 1 நாளுக்கு ) |
| 2 | ஸ்கை மேன் பவர் ஏஜென்ஸி,<br>53–ஏ ஏ.எம்.சி ரோடு,<br>திண்டுக்கல். | கூலி ரூ. 475.00<br>PF, ESI, Ins.,safty ரூ. 79.00<br>நிர்வாக கட்டணம் ரூ. 47.05<br>மொத்தம் ரூ. 601.05/–<br>(1 நபருக்கு, 1 நாளுக்கு ரூ. 601.05/– ) |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் வரிசை எண். 1ல் காணும் மிகக் குறைந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.ஏ.ராமலிங்கம், PWD காண்ட்ராக்டர், அய்யம்பாளையம் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கிட அனுமதி வேண்டி மாமன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது. **(ந.க.எண். 1320/2019/எச்1)**

<u>**அலுவலகக் குறிப்பு**</u>

1) அனுமதிக்கலாம்
2) பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மிகக் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.ஏ.ராமலிங்கம், PWD காண்ட்ராக்டர், அய்யம்பாளையம் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**31)** இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள TN57 AK 3085 நாய் பிடிக்கும் வாகனத்திற்கு பழுது நீக்கம் மற்றும் தகுதிச் சான்று பெற 27.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நிறுவனம் | விலை விகிதம் |
|---|---|---|
| 1 | ஸ்ரீவிநாயகா ஆட்டோ மொபைல்ஸ்,<br>திருச்சி ரோடு, திண்டுக்கல் | ரூ.93,250/– |
| 2 | குமார் ஆட்டோ கேர்,<br>ஜிடிஎன். சாலை, திண்டுக்கல். | ரூ. 88,850/– |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் வரிசை எண். 2ல் காணும் மிகக் குறைந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள குமார் ஆட்டோ கேர், திண்டுக்கல் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கிட அனுமதி வேண்டி மாமன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1595/20191/எச்1)**

**அலுவலகக் குறிப்பு**

1) அனுமதிக்கலாம்
2) பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மிகக் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள குமார் ஆட்டோ கேர், திண்டுக்கல் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**32)** நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளுக்கு குத்தகை உரிமம் புதுப்பித்தல் மற்றும் உள் குத்தகைக்கு விடப்பட்ட கடைகளின் பெயர் மாற்றம் செய்வது குறித்து வெளியிடப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண். 92, நாள்.03.07.2007ல் தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறைகளின்படி இம்மாநகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கு கீழே குறிப்பிட்டுள்ளபடி பெயர் மாற்ற மனுக்கள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | வரி விதிப்பு எண் | கடைகள் விபரம் | முந்தைய கடை குத்தகைத்தாரர்கள் பெயர் | தற்போதைய பெயர் மாற்றம் கோருபவர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | 117 | பென்சனர் தெரு, ஆர்.சி.சி. பெட்டிக் கடை | திரு. ராஜமாணிக்கம் | திரு. எஸ். ஆர். ராஜீ |
| 2 | 120 | அலுவலக மேற்புறக் கடை எண். 2 | திரு.பி. சரவணன் | திரு. ஏ.சாமுவேல் த/பெ அசீரிய நாடார் |
| 3 | 141 | பழைய பேருந்து நிலைய கடை எண். 1 | திரு. எஸ். பழனிவேல் | திரு. மரிய பாக்கியராஜ் த/பெ திரு. சூசை மாணிக்கம் |
| 4 | 279 | காமாராஜர் பேருந்து நிலையம் கடை எண். பி14 | திருமதி எம். கருத்தம்மாள் | திரு. ஜி. தினேஷ் பாபு |
| 5 | 356 | அண்ணா வணிக வளாக கடை எண். 8 | திரு. அலெக்ஸ் மான்சிங | திரு. கே. செந்தில்குமார் த/பெ கூலு |
| 6 | 414 | அண்ணா வணிக வளாக கடை எண். 66 | திரு. ஏ. ஆல்பார்ட் | திரு. ப. சின்னப்பர் த/பெ பத்தி நாதன் |
| 7 | 513 | காமாராஜர் பேருந்து நிலைய புதிய கடை எண் 506 | திரு. டி.வி.பாலகிருஷ்ணன் | திரு. டி. செல்வக் குமார் |
| 8 | 772 | காந்தி மார்க்கெட் கடை எண். சி18 | திருமதி. வி. லட்சுமி | திருமதி எம். ராஜாத்தி |

மேற்கண்ட பட்டியல்களின்படி வரப்பெற்றுள்ள பெயர் மாற்ற மனுக்களை விதிகளின்படி பெயர் மாற்றம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண். 7347/2015/அ7)**

**அலுவலக குறிப்பு..**

அரசாணை (நிலை) எண் 92 நாள்.03.07.2007 தெரிவிக்கப்பட்டுள்ள கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்படுத்தி ஒரு முறை மட்டும் பெயர் மாற்றம் செய்து கொள்ள அனுமதிக்கலாம்.

1) நகராட்சி கடைகள், ஒரே நேரத்தில் மூன்றாண்டு காலத்திற்குக் குத்தகைக்கு விடப்படலாம். மூன்று ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்புக் கால அளவு முடிவடைவதன் பேரில், அக்குத்தகை தன்னியல்பாகவே (automatically) புதுப்பிக்கப்படும். இவ்வாறாக ஒன்பது ஆண்டுகள் வரையில் புதுப்பிக்கப்படும். மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை குத்தகைத் தொகை 15(பதினைந்து) சதவீதம் உயர்த்தப்படும். (இந்நிபந்தனை தற்போது குத்தகையை அனுபவித்துவரும் குத்தகைதாரர்களுக்கும் பொருந்தும்)

2) ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர், குத்தகை வாடகை மறுமதிப்பீடு செய்யப்பட வேண்டும். தற்போதைய குத்தகைதாரருக்கு அப்போதைய அங்காடி மதிப்பின் அடிப்படையிலான திருத்தியமைக்கப்பட்ட குத்தகை வீதத்தில், மேற்கொண்டு 9 ஆண்டுகளுக்கு குத்தகைக் கால அளவை நீட்டித்துக் கொள்ள முன்னுரிமை அளிக்கலாம். அவர் ஒப்புக் கொள்ளவில்லையானால், அச் சொத்து பொது ஏலத்தின் மூலம் குத்தகைக்கு விட வேண்டும்.

3) குத்தகைத்தாரர்கள் மூன்று ஆண்டுக்கு ஒருமுறை குத்தகையை புதுப்பிக்க கீழ்க்கண்டுள்ள விதங்களில் கட்டணம் செலுத்த வேண்டும்.

| | |
|---|---|
| 1. < 100 சதுரடி | ரூ.500/– |
| 2. 100–500 சதுரடி | ரூ.1000/– |
| 3. 500–1000 சதுரடி | ரூ.1500/– |
| 4. > 1000 சதுரடி | ரூ.2000/– |

4) அனுமதியற்ற அனுபோகதாரர்களின் நேர்வில், ஒரு முறை மட்டுமே அளிக்கப்படும் சலுகை அடிப்படையில், குத்தகை உரிமையை அவர்களுடைய பெயரில் மாற்றித் தரலாம். இதற்காக விண்ணப்பதாரர் 12 மாதங்களுக்குரிய மாதந்திர குத்தகை தொகைக்கு சமமான தொகையை முன்பணமாகச் செலுத்த வேண்டும். இது தவிர, கீழே குறிப்பிட்டுள்ள குறைந்த அளவு தொகைக்குட்பட்டு, 12 மாத வாடகைக்கு சமமான தொகையை பெயர் மாற்றக் கட்டணமாகவும் அவர் செலுத்த வேண்டும்.

| | |
|---|---|
| 1. < 100 சதுரடி | ரூ.2500/– |
| 2. 100–500 சதுரடி | ரூ.5000/– |
| 3. 500–1000 சதுரடி | ரூ.7500/– |
| 4. > 1000 சதுரடி | ரூ.10000/– |

5)முதல் குத்தகைதாரரின் வாரிசுதாரர்கள் அனைத்துப் பாக்கித் தொகைகளையும் செலுத்துவதன் பேரிலும், நகர்புற உள்ளாட்சி மன்றம் அவ்வப்போது நிர்ணயிக்கும் குத்தகைத் தொகையைச் செலுத்த ஒப்புக் கொள்ளும் நிபந்தனைக்குட்பட்டும் அவர்களுடைய பெயரில் குத்தகை உரிமை மாற்றம் பெற உரிமையுடையவராவர்.

சட்டப்படியான வாரிசுதாரர்கள், பொதுவான குத்தகை நிபந்தனைகள் மற்றும் குத்தகை நிர்ணயத்திற்கு உட்பட்டவர்களாவர். பெயர் மாற்றம் செய்வதற்கான விண்ணப்பக் கட்டணம் ரூ.500/– (ரூபாய் ஐநூறு மட்டும்) அது நிர்ணயிக்கப்படும்.

மேற்கண்ட நிபந்தனைகளின்படி உரிய கட்டணம் செலுத்தி பெயர் மாற்றம் செய்து கொள்ள அனுமதிக்கலாம்..

---

**33)** திண்டுக்கல் மாநகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018–19 ன் கீழ் மேற்கொள்ளப்பட உள்ள கீழ்க்கண்ட பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூபாயில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.15 அண்ணா நகர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து காவலர் வீட்டு வசதி வாரிய குடியிருப்புக்கு புதிய குழாய்கள் அமைக்கும் பணி | 1400000 |
| 2 | வார்டு எண்.14, சிலுவத்தூா் குளத்திற்கு எதிரில் சமுதாயக் கூடம் கட்டும் பணி | 2500000 |
| 3 | வார்டு எண்.30, கக்கன் நகர் அங்கன்வாடி எதிரில் சமுதாயக் கூடம் கட்டும் பணி | 2500000 |
| 4 | வார்டு எண்.44, சவரியார் பாளையம் எடை மேடை அருகில் சமுதாயக் கூடம் கட்டும் பணி | 2500000 |
| 5 | வார்டு எண்.48, நான்கு ரோடு சந்திப்பில் சமுதாயக் கூடம் கட்டும் பணி | 2500000 |
| 6 | வார்டு எண்.26, மார்க்கெட் குமரன் தெருவில் கலையரங்கம் கட்டும் பணி | 2000000 |

(ந.க.எண்: 271 / 2013 / இ 4 )

<u>அ.குறிப்பு</u>

1) மாமன்றம் அனுமதி வழஙகலாம்.
2) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018–19 ன் கீழ் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மாமன்றம் அனுமதி வழஙகலாம்

---

**34)** இம் மாநகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018–19 ன் கீழ் வார்டு எண்.15 அண்ணா நகர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து காவலர் வீட்டு வசதி வாரிய குடியிருப்புக்கு புதிய குழாய்கள் அமைக்கும் பணிக்கு 26.2.2019 அன்று முதல்

முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றது.

| வ.எண். | ஒப்பந்தக்காரரின் பெயர் | விலைவிகிதம் | முன் வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1) | திரு..பி.எஸ். ஸ்டாலின் | 0.01 % மதிப்பீட்டிற்கு குறைவு | ரூ.14000/– மதிப்புள்ள வஙகி வரைவோலை |
| 2) | கிளாசிக் கன்ஸ்ட்ரக்ஷன் கோ | 10.00 % மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.14000/– மதிப்புள்ள வஙகி வரைவோலை |

(ந.க.எண். 271 / 2013 / இ4)

அ.குறிப்பு

1) ரூ.14,00,000/– மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட இப் பணிக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திண்டுக்கல் அவர்களின் ந.க.எண். 2545 / 2018 / அ5, நாள் 15.2.2019 ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

2) முதல் அழைப்பில் வரப் பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. திரு..பி.எஸ். ஸ்டாலின், ஒப்பந்ததாரரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

---

**35) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவு ந.க.எண்.8009/2016/J1 நாள்.04/11/2016 மற்றும் 28/06/2017 ஆய்வு கூட்ட அறிக்கையில்** 300 வீடுகளுக்கு 1 நபர் என்ற வீதத்தில் நியமிக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இம்மாநகராட்சி மொத்த மக்கள் தொகையான 2,07,307–க்கு (2011 சென்சஸ்) உட்பட்ட 53,573 குடியிப்புகளுக்கு மொத்தம் 173 நபர்கள் தேவைப்படுவதால், இம்மாநகராட்சி பகுதியில் கொசுவினால் பரவக்கூடிய நோய்களை தடுக்கும் பொருட்டு, 48 வார்டுகளிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அலுவலக ந.க.எண்.1239/2015/H2 ன் படி 173 தற்காலிக மலேரியா களப்பணியாளர்களை களப்பணிக்காக ஒப்பந்த அடிப்படையில் எக்ஸ்ல் நீட் அண்ட் டைடி ஏஜென்ஸி, என்ற நிறுவனத்தின் மூலமாக 45 நாட்களுக்கு 29.05.2018 முதல் களப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணி ஒப்பந்தகாலம் 22.02.2019 அன்று உடன் முடிவடைவதால், ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ளப்பட்டு **வரும் எக்ஸ்ல் நீட் அண்ட் டைடி ஏஜென்ஸி, திண்டுக்கல்** மூலம் மேலும் 45 நாட்களுக்கு பணி நீட்டிப்பு செய்து கொள்ளவும், மேற்படி 173 தற்காலிக மலேரியா களப்பணியாளர்களுக்கு ஏற்கனவே நிர்ணயம்

செய்யப்பட்டுள்ள மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல் அவர்களின் 2017–2018ம் ஆண்டு தினக்கூலி நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.279/–ன்படி பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவு தொகை ரூ.24,00,000–க்கு (ரூபாய் இருபத்தி நான்கு இலட்சம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1239/2015/எச்2).

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசிய கருதியும், நிர்வாக நலன் கருதியும், தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**36)** அரசாணை எண்.84, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (EC2) துறை நாள் 25.06.2018ன்படி 01.01.2019 முதல் ஒருமுறை மட்டும் பயன்படுத்தக் கூடிய பிளாஸ்டிக் பொருட்களை தடை செய்யப்பட்டுள்ளதை இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைமுறைப்படுத்தும் பொருட்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், பொது மக்கள் கூடும் முக்கிய இடஙகளில் விழிப்புணர்வு பதாகைகள்(20 எண்ணிக்கைகள்), கண்காட்சி பொருட்கள், ஒலி பெருக்கியின் (இரண்டு வாகனஙகள்) மூலமாக விழிப்புணர்வு ஏற்படுத்துதல், பிளாஸ்டிக் தடை குறித்த பலகைகள் வைத்தல் (60 எண்ணிக்கைகள்) பேரணிகள் நடத்துதல், முகாம்கள் அமைத்தல் மற்றும் துண்டுப் பிரதிகள் (50000 எண்ணிக்கை) அச்சடித்து வழஙகுதல் போன்ற பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நிறுவனம் | விலை விகிதம் |
|---|---|---|
| 1 | ஜூபிடர் ஆப்செட் பிரஸ், 107 சோலைஹால் ரோடு, திண்டுக்கல் | ரூ.5,730/– |
| 2 | கண்ணன் பிரஸ், 1 கவடக்கார தெரு, திண்டுக்கல். | ரூ. 5,530/– |

ஆ) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் வரிசை எண். 2ல் காணும் மிகக் குறைந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள கண்ணன் பிரஸ், திண்டுக்கல் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கிட அனுமதி வேண்டி மாமன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.15479/2015/எச்2)**

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) அனுமதிக்கலாம்

2) பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மிகக் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள கண்ணன் பிரஸ், திண்டுக்கல் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**37)** இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித் திரியும் தெருநாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்திட, இம்மாமன்ற தீர்மானம் எண். நாள் ன்படி இந்நிதியாண்டில் முதற்கட்டமாக 1200 நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் ரேபிஸ் வெறி நாய்கடி தடுப்பூசி போடும் பணி மேற்கொள்வதற்கு முதற்கட்டமாக கடந்த 20.02.2019ம் அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் எவரும் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கவில்லை.

எனவே இரண்டாவது முறையாக 27.02.2019ம் அன்று மீளவும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனம் | விலை விகிதம் |
|---|---|---|
| 1 | Kodaikanal Society for Protection and Care for Animals (KSPCA) , 17/119 Pasadena Fern Hill Road, Kodaikanal. | ரூ.700/– ( நாய் ஒன்றுக்கு) |

ஆ) இரண்டாவது முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரியும் மேற்கண்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே வரப்பெற்றுள்ள Kodaikanal Society for Protection and Care for Animals (KSPCA), Kodaikanal நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கிட அனுமதி வேண்டி மாமன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது **(ந.க. எண்.15479/2015/எச்2).**

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

அனுமதிக்கலாம். மேற்கண்ட Kodaikanal Society for Protection and Care for Animals (KSPCA) , Kodaikanal நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழஙகலாம்.

---

**38)** திண்டுக்கல் மாநகராட்சியின் 2018–19 ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீட்டறிக்கையும் 2019–20 ம் ஆண்டின் உத்தேச வரவு செலவு திட்ட மதிப்பீட்டறிக்கையும் தயார் செய்து மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது

( ந.க.எண். 6499 / 2013/ பி 3 )

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

ஒப்புதல் அளிக்கலாம்

---